Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, APRIL 24 2025

வியாழக்கிழமை 24, ஏப்ரல் 2025 | ஒளி: 10 கதிர் 205 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## விசாரணை குழுவில் ஷானி



ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை விசாரிக்கும் குழுவில் மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர் ஷானி அபேசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2





## பொரளையில் அனர்த்தம்...

கொழும்பில், புதன்கிழமை (23) காலை வேளையில் திடீரென கடும் மழை பெய்துள்ளது. கடும் காற்றும் வீசியதால், பொரளை பகுதியில் மரமொன்று வேரோடு சரிந்து விழுந்துள்ளது. இதன்போது, அவ்வழியாக சென்ற 7 வாகனங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன.

# “தோட்டாக்களே தலைத்தூக்கி விட்டன”

### தேசிய பாதுகாப்பு தொடர்பில் டியூஷன் போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

### சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினையை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்

நாட்டு மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கும், தமது அன்றாட வாழ்க்கையை பாதுகாப்பான முறையில் கழிக்கவும் ஏற்ற சூழலை உருவாக்கித் தர வேண்டியது நாட்டை ஆளும் அரசாங்கத்தினது கடமையாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

புலத்சிங்கள பிரதேசத்தில் புதன்கிழமை (23) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, தற்போதைய அரசாங்கத்திற்கு இரு தேர்தல்களிலும் பெரும் மக்கள் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. முறைமையில் மாற்றத்தை மக்கள் எதிர்பார்த்தனர்.

இன்று நாட்டில் பயங்கரமான சூழ்நிலை உருவாகி, கொலைக் கலாசாரம் தலைதூக்கியுள்ளது.

இந்த வருடம் ஆரம்ப காலப்பகுதிக்குள் மட்டும் அதிக அளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனால் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அச்சமின்றி வீடுகளுக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தும் நிலை இன்று காணப்படுகின்றன.

வீதிகளில் சுதந்திரமாக நடமாடக்கூட முடியாத நிலையை நாடு எட்டியுள்ளது. வர்த்தகர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் அரசியல்வாதிகள் என சகலருக்கும் துப்பாக்கிச் சூடு நடத்தும் நிலைக்கு நாடு தற்போது வந்துள்ளது.

தொடர்ச்சி P2



## மாத்தறை சிறையில் குழப்பம் தணிந்தது



மாத்தறை சிறையில், செவ்வாய்க்கிழமை (22) இரவு முதல் நிலவியம் குழப்பமான சூழ்நிலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்நிலையில், மறு அறிவிப்பு வரும் வரை கைதிகளைப் பார்க்க அவர்களின் உறவினர்கள் எவருக்கும் அனுமதி வழங்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறையில் ஏற்பட்ட குழப்பகரமான நிலைமை காரணமாக, புதன்கிழமைக்கான (23) நீதித்துறை நடவடிக்கைகளையும் பாதித்துள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாத்தறை சிறைச்சாலையில் அமைதியின்மையை ஏற்படுத்தும் கைதிகள் தாமாக முன்வந்து அதிகாரிகளிடம் சரணடையலாம் என்று அறிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## ஜம்மு-காஷ்மீர் தாக்குதலில் 26 பேர் பலியானார்கள்

### சஜித் பிரேமதாச கண்டனம்



ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகளால், செவ்வாய்க்கிழமை (22) மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உடல்கள், ஸ்ரீநகரில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அங்கு சென்ற மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியுள்ளார். மேலும், உயிரிழந்தவர்களின் உறவினர்களை சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



## டான் பிரயசாத் சுட்டுக்கொலை

சமூக செயற்பாட்டாளரும், மே.6ஆம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின், கொலன்னாவ நகர சபைக்கான வேட்பாளருமான டான் பிரயசாத், இனந்தெரியாத இருவரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பெண் உட்பட மூவர் கைது

சமூக ஆர்வலரும் கொலன்னாவை நகரசபை வேட்பாளருமான டான் பிரியசாத்தின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில், பெண்ணொருவர் உட்பட மூவரை வெல்லம்பிட்டிய பொலிஸார் கைது செய்துள்ளதாக மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.தகவல் வழங்கியதாக சந்தேகத்தின் பேரில் மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


## தந்தை மகனுக்கு பயணத்தடை

சமூக ஆர்வலர் டான் பிரியசாத் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் தந்தை மற்றும் மகன் இருவரும் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் வகையில் கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவெல வெளிநாட்டுப் பயணத் தடையை, புதன்கிழமை (23) விதித்தார்.

வெல்லம்பிட்டிய பொலிஸாரின் கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர் இந்த வெளிநாட்டுப் பயணத் தடை பிறப்பிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## “புத்தாண்டு SMSகள் இலவசமானவை”



பொதுமக்களுக்கு அனுப்பப்பட்ட புத்தாண்டு குறுஞ்செய்திகளுக்கு ரூ.98 மில்லியன் செலவிடப்பட்டதாக கூறப்படுவதை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு சார்பான அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதியின் அலுவலகத்துடன் தொடர்புடைய டினுக் கொலம்பகே கூறுகையில், முந்தைய ஜனாதிபதிகளிடமிருந்து பொதுமக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துச் செய்திகள் இலவசமாக அனுப்பப்பட்டன.

“இது தொலைத்தொடர்பு விநியோகத்தர்களால்

தொடர்ச்சி P2

## இத்தாலிக்கு சென்றார் மல்கம் ரஞ்சித்



எதிர்வரும் 26ஆம் திகதி வத்திக்கானில் உள்ள செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் நடைபெறும் பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை புதன்கிழமை (23) காலை இத்தாலிக்கு பயணமானார்

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து காலை 09.30 மணியளவில் அபிதாபி சென்று, பின்னர் அங்கிருந்து மற்றுமொரு விமானத்தில் இத்தாலிக்கு பயணமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உச்சத்தை தொட்டது உப்பு

■ ஏ.எச்.ஏ.ஹுஸைன்



சமீப சில நாட்களாக சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் எகிறியுள்ளது. அவற்றுக்கான தட்டுப்பாடும் கிராக்கியும் அதிகரித்துள்ளது. இதனால் அன்றாட சீவனோபாயத்தைக் கழிக்க முடியாமல் பல நடுத்தரக் குடும்பங்கள் அங்கலாய்ப்பதை அவதானிக்க முடிகிறது.

தொடர்ச்சி P2

## தலைக்கவசத்தால் தாக்கப்பட்ட மாணவன் உயிரிழப்பு



ரிதீகம - வெலெகெதர - ஷகரலிய வத்த பகுதியில் பாடசாலை உயர் வகுப்பு மாணவர்களால் தாக்குதலுக்கு இலக்காகி, குருணாகல் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மாணவன் ஒருவன் செவ்வாய்க்கிழமை (22) உயிரிழந்துள்ளார்.

குருணாகலை - புலுவல மகா வித்தியாலயத்தில் 11ஆம் தரத்தில் கல்வி கற்ற திலிண விராஜ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## தென்னக்கோன் விவகாரம்: விசாரணைக் குழு



முதல் தடவையாக கூடியது

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்கான விசாரணைக் குழு முதல் தடவையாகப் பாராளுமன்றத்தில்

தொடர்ச்சி P2

## இ.போ.சவுக்கு ரூ.10 கோடி இழப்பு



இலங்கை போக்குவரத்து சபையில், தினசரி மேற்கொள்ளப்படும் டிக்கெட் மோசடியால், சுமார் 10 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, பயணிகள் கிரெடிட் மற்றும் டெபிட் கார்டுகளைப் பயன்படுத்தி டிக்கெட்டுகளுக்கு பெற்றுக்கொள்ளும் ஒரு முறைமையை செயல்படுத்துவது குறித்து அமைச்சு பரிசீலித்து வருகிறது.

இந்த தீர்வை ஆராய்வது குறித்த விவாதங்கள் ஏற்கெனவே தொடங்கிவிட்டதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## “7 மில்லியன் பேர் பதியவில்லை

வரி செலுத்துவோர் அடையாள எண்களை (TIN) பெறுவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் மொத்தம் 10 மில்லியன் மக்கள் பதிவு செய்துள்ளனர், அதே நேரத்தில் குறைந்தது 7 மில்லியன் மக்கள் இன்னும் பதிவு செய்யப்படவில்லை என்று உள்நாட்டு இறைவரித் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் நாயகம் பி.கே.எஸ். சாந்த தெரிவித்தார். ஊடகங்களுக்கு பேட்டி அளித்த அவர், 1 கோடி மக்களில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களும் அடங்குவர் என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “தோட்டாக்களே தலைத்தூக்கி விட்டன”

இது தொடர்பில் பாராளுமன்ற சபை அமர்வுகளிலும் வெளியிலும் கேள்வியெழுப்பினால், இது தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் அல்ல என அரசாங்கம் தெரிவித்து வருகிறது.

நாட்டில் கொலைக் கலாசாரம் தலைதூக்கி வருகின்ற நிலையில், அதனைத் தடுக்க முடியாமல் அரசாங்கம் மௌனம் காத்து இருக்கும் போது, தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பில்லை என எவ்வாறு கூறுவது என்பதில் பிரச்சினை காணப்படுகின்றன.

இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்கள் தேசியப் பாதுகாப்பு தொடர்பில் டியூஷன் வகுப்புகளை நடத்துவதற்குக் கூட முயற்சித்தனர்.

ஆன போதிலும் தற்போதைய ஆட்சியாளர்கள் தேசிய பாதுகாப்பு தொடர்பில் டியூஷன் போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சட்டத்தை விட தற்போது தோட்டா, வாள், கத்தி, வெடிகுண்டு என்பன வென்றுள்ளன.

இவ்வாறு ஒரு நாட்டை நடத்த முடியாது. சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினையை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். சட்டம் ஒழுங்கு பிரச்சினைக்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவும் வேண்டும்.

குழந்தைகள், பெண்கள், தாய்மார்கள் என குடிமக்களுக்கு நாட்டில் பாதுகாப்பு இல்லை. அச்சத்தோடு தமது நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு இன்று குடிமக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தினந்தோறும் அச்சத்தோடு பொழுதை கழித்து விட முடியாது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதிமன்றங்களுக்குள்ளும் கொலைகள் இடம்பெற்று வரும் நாட்டில் நாம் வாழ்ந்து வருகிறோம். இந்த சம்பவத்துடன் தொடர்பான சந்தேக நபர்களை அரசாங்கத்தினால் இன்னும் கூட கண்டுபிடிக்க முடியாதுபோயுள்ளது.

நாடு எங்கே சென்று கொண்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கை சரியான முறையில் பேண வேண்டும். அரசாங்கம் இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதனை சாதாரணமாக கடந்து விடமுடியாது. இந்த போக்கு சரியான போக்கல்ல. மறுபுறம் மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையில் இருந்து இப்போது விலகிச் செல்கின்றனர் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

## “7 மில்லியன் பேர் பதியவில்லை




“மே 2023 இல் ஒரு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது, இதன் மூலம் 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து நபர்களும், டிசம்பர் 31, 2023 க்குள் 18 வயதை அடைபவர்களும், 2024 ஜனவரி 1 க்குப் பிறகு 18 வயதை எட்டுபவர்களும் வரி செலுத்துவோர் அடையாள எண் (TIN) பதிவைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டது.

அந்த நேரத்தில் TIN பெறுவது சட்டப்பூர்வ தேவையாக மாறியது, ஆனால் ஆரம்பத்தில் பலருக்கு அவர்களின் எண்கள் கிடைக்கவில்லை. அதைத் தொடர்ந்து, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) அவர்களுக்கான TIN-களை செயலாக்கி வழங்கியது, இதனால் பதிவுசெய்யப்பட்ட நபர்களின் மொத்த எண்ணிக்கை 10 மில்லியனாக உயர்ந்தது,” என்று சாந்த கூறினார்.

வரி குறிப்புகளை எளிதாக்குவதற்காக மக்கள் தங்கள் TIN-களைப் பெறுமாறு அவர் கேட்டுக்கொண்டார். இந்த நோக்கத்திற்காக, IRD தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களுக்குச் செல்லாமல் மக்கள் தங்கள் TIN-களைப் பெற நிகழ்நிலை அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில், வங்கி வைப்புத்தொகை, வாகனப் பதிவுகள் மற்றும் உரிமை பரிமாற்றங்கள், நிலப் பதிவுகள், வர்த்தக பதிவுகள், கடனட்டைகளைப் பெறுதல் மற்றும் பல நிதி பரிவர்த்தனைகள் உள்ளிட்ட பல்வேறு நிதி மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு TIN கட்டாயமாகிவிடும் என்று அவர் தெளிவுபடுத்தினார்.

## உச்சத்தை தொட்டது உப்பு

கடந்த சில நாட்களாகக் கிழக்கு மாகாணத்தில் பொருட்களின் அசுர விலையேற்றத்தால் குடும்பஸ்தர்கள் தீர்வுக்கான வழி தெரியாமல் தடுமாறும் இக்கட்டான நிலை தோன்றியுள்ளது.

சிவப்புச் சீனியின் விலை ஒரு கிலோ கிராம் 270 ரூபாவாக இருக்கின்ற அதேவேளை, சீனியின் விலையையும் மேவி, ஒரு கிலோ கிராம் கல் உப்பு 300 ரூபாவாகவும் தூள் உப்பு 400 ரூபாவாகவும் விற்கப்படுகின்ற அதேவேளை, பல ஊர்களிலுள்ள கடைகளில் எந்தவிதமான உப்பும் விற்பனைக்கு இல்லாத தட்டுப்பாடும் நிலவுகிறது.

இது விடயமாக உப்பு வியாபாரிகளிடம் கேட்டபோது உப்பு விற்பனை செய்யும் மொத்த வியாபாரிகளிடமிருந்து உப்பைப் பெறமுடியவில்லை. அப்படிப் பெற்றாலும் அவர்கள் தரும் விலைக்கு உப்பை அங்கிருந்து ஏற்றிவந்து விற்று போக்குவரத்துச் செலவுகளைக் கூட ஈடு செய்ய முடியவில்லை என்கின்றனர்.

புளி ஒரு கிலோ கிராம் 2,500 ரூபாய் தொடக்கம் 3,000 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இஞ்சியும் இதேவிலைதான். மிளகாய் 2,000 ரூபாய், நடுத்தரமான இறால் 3,000 ரூபாய். சின்ன மீன்கள் தொடக்கம் பெரிய மீன்கள் வரை 1,000 ரூபாவுக்கு குறைவாக வாங்க முடியாத நிலைமை காணப்படுகிறது. தேங்காய் விலையும் 300 ரூபாய் என்று உச்சத்தைத் தொட்டுள்ளது.

இவ்வாறு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் அசுர விலையேற்றத்தாலும் தட்டுப்பாட்டாலும் இல்லாத இயலாத மக்களின் வாழ்வு நிலை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. பலர் நாளாந்த ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ள முடியாமல் பதற்றமடைந்து போயுள்ளார்கள்.

இதுவரை வெளிநாட்டு வேலை வாய்ப்பை விரும்பியிருக்காத இளைஞர் யுவதிகளும் குடும்பஸ்தர்களுமாக, இப்பொழுது வேறு வழியின்றி மத்திய கிழக்கு நாடுகளின் வேலை வாய்ப்பை நாடியிருப்பதாக சமூக நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள்.

## டான் பிரயசாத் சுட்டுக்கொலை

வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள 12 மாடிகளைக் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றின் ஆறாவது மாடியில், மதுபானம் அருந்திக்கொண்டிருந்த போதே, செவ்வாய்க்கிழமை (22) இரவு 9.05 மணியளவில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

12 மாடிகளைக் கொண்ட அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில், ஆறாவது மாடியிலுள்ள தனது தங்கையில் வீட்டுக்கு வெளியில் இருந்து மதுபானம் அருந்திக்கொண்டிருந்த போதே, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வருகைதந்த துப்பாக்கி தாரிகள் இருவரும், ஆறாவது மாடி வரையிலும் நடந்தே வந்து, சுமார் 50 வினாடிக்குள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட பின்னர் தப்பிச் சென்றுள்ளனர். சுமார் 7 தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில், டான் பிரயசாத்தின் நெஞ்சு, வயிறு மற்றும் பாதம் ஆகிய பகுதிகளில் நான்கு சன்னங்கள் பாய்ந்துள்ளன என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது,

இந்த துப்பாக்கிச் சூட்டில் மற்றுமொரு நபர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். படுகாயமடைந்த டான் பிரயசாத், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதன் பின்னர் இரண்டு நிமிடங்களுக்கு மாடியிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பில், முதலாவது குரல் பதிவை வெளியிட்டிருந்த பொலிஸ் ஊடகப்பிரிவு அவர், மரணித்து விட்டார் என அறிவித்திருந்தது. எனினும், சில நிமிடங்களின் பின்னர் இரண்டாவது குரல் பதிவை வெளியிட்டு, டான் பிரியசாத் மரணிக்கவில்லை என்றும், அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைப்பெற்று வருகின்றார் எனவும் தெரிவித்திருந்தது.

எனினும், புதன்கிழமை (23) காலை, மற்றுமொரு பதிவை வெளியிட்ட பொலிஸ் ஊடகப்பிரிவு, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான டான் பிரசாத், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், மரணமடைந்துள்ளார் என குறிப்பிட்டிருந்தது.

துப்பாக்கி தாரிகள் இருவரில் ஒருவர் தலைக்கவசம் அணிந்திருந்தார். மற்றுமொருவர், அலைபேசியில் உரையாடியவாறே, ஆறாவது மாடிவரையிலும் சென்றுள்ளனர். துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பியோடிய போது, மாடியில் இருந்து வெளியேறிய நபர் மீதும் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டமை சி.சி.ரி.வி. காட்சிகளின் ஊடாக தெரியவந்தது. எனினும், அவருக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அறியமுடிகின்றது.

துப்பாக்கித்தாரி 9 மில்லி மீற்றர் துப்பாக்கியைப் பயன்படுத்தியே துப்பாக்கிப் பிரயோத்தை மேற்கொண்டுள்ளார் என்பதும் அந்த காட்சிகளில் இருந்து தெரியவந்துள்ளது.

39 வயதான டான் பிரயசாத், மூன்று பிள்ளைகளின் தந்தையாவார் என்பதுடன், மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருவதாக வெல்லம்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டான் பிரயசாத்தின் சகோதரனும் இன்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானார் என்பது குறிப்பிடத்தக்கது என்பதுடன், பாதாள உலகக் கோஷ்டியினரிடம் இருந்து, டான் பிரயசாத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

## தந்தை மகனுக்கு பயணத்தடை

டான் பிரியசாத்தின் கொலைக்குக் காரணமானவர் வெல்லம்பிட்டியவில் உள்ள லக்சந்த செவன அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தின் ஆறாவது மாடியில் உள்ள ஒரு உறவினரின் வீட்டில் செவ்வாய்க்கிழமை (22) இரவு இருந்தபோது துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்ததாக வெல்லம்பிட்டிய பொலிஸார், நீதிமன்றத்தில் அறிக்கையை சமர்ப்பித்து, நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய தரப்பினருக்கும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும் இடையே நீண்டகாலமாகப் பகை இருந்ததற்கான சான்றுகள் வெளியாகியுள்ளன, அதன்படி, இரண்டு சந்தேக நபர்களையும் நாட்டிலிருந்து வெளியேறுவதைத் தடுக்கும் உத்தரவு பிறப்பிக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

## “புத்தாண்டு SMSகள் இலவசமானவை”

வழங்கப்படும் சேவை" என்று அவர் தனது ‘X’ பக்க பதிவு ஒன்றில் கூறினார்.

கடந்த ஆண்டு மட்டும், இலங்கை ஜனாதிபதியின் வருடாந்திர சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு குறுஞ்செய்தி செய்தியை அனுப்புவதற்கு ரூ. 98 மில்லியன் செலவிடப்பட்டதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டஹச்சி தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளார்.

## விசாரணை குழுவில் ஷானி

அதன்படி, விசாரணை அறிக்கையை ஆய்வு செய்வதற்காக, மூத்த பிரதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அசங்க கரவிட்ட தலைமையிலான நான்கு பேர் கொண்ட குழு, ஐந்து உறுப்பினர்களாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## தென்னக்கோன் விவகாரம்

தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களைப் பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்கான விசாரணைக் குழு புதன்கிழமை(23) பாராளுமன்றத்தில் முதல் தடவையாகக் கூடிக் கலந்துரையாடியது.

இந்தக் குழுவுக்கு உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி.சூரசேன தலைமை தாங்குவதுடன், நீதிபதி டபிள்யூ.எம்.என்.பி இத்தவல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஈ.டபிள்யூ. எம் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாவர். இக்குழு மீண்டும் 25ஆம் திகதி கூடவுள்ளது.

தேசபந்து தென்னக்கோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு குறித்த சட்டத்தின் 5ஆவது பிரிவுக்கு அமைய விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் கடந்த 08ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## தலைக்கவசத்தால் தாக்கப்பட்ட மாணவன் உயிரிழப்பு

கடந்த 16ஆம் திகதி, ரிதீகம - வெலெகெதர - அங்ஹந்திய பகுதியில் நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வில் பங்கேற்பதற்காக, குறித்த மாணவன் சென்றிருந்த நிலையில் , அதே பாடசாலையில் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் குழுவொன்றும், மற்றொரு வெளியாட்கள் குழுவும், தனிப்பட்ட பகைமையை காரணமாக அவனைத் தாக்கியுள்ளனர்.

இதன்போது, தலைக்கவசங்களால் மாணவனின் தலையில் தாக்கப்பட்டதால், அவர் மயக்கமடைந்து, முதலில் மாவத்தகம முதன்மை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், குருணாகல் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மாணவன் உயிரிழந்துள்ளார்.

மாணவனைத் தாக்கிய சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் நடத்திய அனைத்து சந்தேக நபர்களையும் கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி, குருணாகலை - வெலெகெதர பொலிஸ் நிலையத்தின் முன்பாக ஷகரலிய தோட்ட பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

## ஜம்மு–காஷ்மீர் தாக்குதலில் 26 பேர் பலியானார்கள்

இந்த பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். சுற்றுலா சென்றவர்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு முன்பாக அவர்களின் மதம் குறித்து கேட்டு பின்னர் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். குஜராத், கர்நாடகா உள்பட பல மாநிலங்களை சேர்ந்தவர்கள் இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

லஷ்கர்-இ-தொய்பாவின் கிளை அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் (TRF) இந்த தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உலக நாடுகளின் தலைவர்கள் தொடங்கி பொதுமக்கள் வரை அனைவரும் இந்த சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்த சம்பவத்துக்கு, எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச கண்டனம் தெரிவித்துள்ளார்.

“ஜம்மு - காஷ்மீரில் நடந்த கோழைத்தனமான பயங்கரவாத தாக்குதலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அப்பாவி பொதுமக்களுக்கு எதிரான வன்முறை மனித குலத்திற்கு எதிரான ஒரு மிகப்பெரிய குற்றமாகும். பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் இந்திய மக்களுடன் நாங்கள் ஒற்றுமையாக நிற்கிறோம். பயங்கரவாதத்திற்கு எதிராக நாம் எப்போதும் ஒற்றுமையாக நிற்க வேண்டும்,” என்று அவர் தனது X செய்தியில் தெரிவித்துள்ளார்.

## மாத்தறை சிறையில் குழப்பம் தணிந்தது

அதன்படி, பத்து கைதிகள் இப்போது தாமாக முன்வந்து சிறைச்சாலை பேருந்தில் ஏறியுள்ளனர், மேலும் அவர்களை அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு செல்லப்பட்டுள்ளனர்.

மற்றொரு குழுவினர் சிறைச்சாலை வளாகத்தில் சாப்பிட்டு, குடித்து, பாடி, மகிழ்ந்து வருவதாகவும், சுதந்திரமாக இருக்க வாய்ப்பு கேட்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

மேலும், சிறைச்சாலையில் இருந்து மருந்துகள் மற்றும் அலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

# வீட்டு வசதிக்கான நிதி உதவி அதிகரிப்பு



குறைந்த வருமானம் மற்றும் வறிய குடும்பங்களின் வீட்டுவசதி தொடர்பான தேவைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட ‘ஒபாடா கேயக் - ரடடா ஹெடக்’ வீட்டுவசதி திட்டத்தின் கீழ் ஒரு வீட்டு வசதிக்கு வழங்கப்படும் நிதி உதவியை அதிகரிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஆரம்பத்தில், அரசாங்கம் ரூ.650,000 நிதி உதவி, மீதமுள்ள கட்டுமான செலவை பயனாளி ஏற்க வேண்டும். இருப்பினும், இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, ஒரு வீட்டுவசதி அலகு கட்டுவதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூ.1,147,000 முதல் ரூ.1,764,000 ஆக உள்ளது.

இது குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு குறிப்பிடத்தக்க நிதிச் சுமையை ஏற்படுத்துகிறது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, நகர்ப்புற மேம்பாடு, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சர், அரசாங்க பங்களிப்பை ரூ.1,000 இலிருந்து ரூ.1,000 ஆக உயர்த்துவதற்கான திட்டத்தை சமர்ப்பித்தார்.

அதன்படி, அதிகரித்த கட்டுமானச் செலவுகளை ஈடுகட்டுவதில் பயனாளிகள் எதிர்கொள்ளும் நிதிச் சிரமங்களை ஒப்புக்கொண்டு, அமைச்சரவை இந்த முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்தது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் ஒரு குடும்பம் தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகவும் தேவைப்படுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தைப் பொறுத்து, புதிய வீடு கட்டுவதற்கு அல்லது ஏற்கெனவே உள்ள வீட்டை மேம்படுத்துவதற்கு உதவி வழங்கப்படுகிறது.

பயனாளிகள் குறைந்தபட்சம் 550 சதுர அடி பரப்பளவு கொண்ட வீட்டைக் கட்ட வேண்டும்.

இந்த முயற்சி பொருளாதார ரீதியாக பின்தங்கிய நபர்களுக்கு வீட்டுவசதி ஆதரவை வழங்குவதன் மூலம் வறுமையை ஒழிக்கவும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் முயல்கிறது.

## அஸ்மினின் வாழ்க்கை வரலாறு
# ஆங்கிலத்தில் நூல் வெளியீடு



■ நிபாஸ்




இலங்கையின் முன்னணி தமிழ்க் கவிஞரும், திரைப்படப் பாடலாசிரியருமான பொத்துவில் அஸ்மினின் வாழ்க்கை வரலாற்றை ஆவணமாகக் கொண்ட ஆங்கில நூல் *“POTTUVIL ASMIN: From Pottuvil to the World -A Global Tamil Voice”* என்ற தலைப்பில் *Amazon Kindle* வழியாக வெளியிடப் பட்டுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழா, சென்னையில் சமீபத்தில் நடைபெற்ற நிகழ்வில் லைக்கா குழுமத்தின் தலைவர் அல்லிராஜா சுபாஸ்கரன், லைக்கா ஹெல்த் நிறுவனத் தலைவர் டாக்டர் பிரேமா சுபாஸ்கரன், மற்றும் லைக்கா புரொடக்ஷன்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி ஜி.கே.எம்.தமிழ்குமரன் ஆகியோரால் சிறப்பாக வெளியிடப்பட்டது.

27 ஆண்டு காலமாக கலை,இலக்கியம், ஊடகம் மற்றும் சினிமா துறையில் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு செய்திருக்கும் பொத்துவில் அஸ்மின் . நடிகர் விஜய் ஆண்டனியின் நான் திரைப்படத்தில் “தப்பெல்லாம் தப்பே இல்லை” என்ற பாடலின் ஊடாக தமிழ் சினிமாவில் அறிமுகமானவராவர்

‘விடியலின் ராகங்கள்’, ‘விடை தேடும் வினாக்கள்’, ‘பாம்புகள் குளிக்கும் நதி’ ஆகிய கவிதை நூல்களைத் தமிழுக்குத் தந்துள்ளார்.

மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் நினைவாகக் கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்த ‘கலைஞர் 100 கவிதைகள் 100’ கவிதை தொகுப்பிலும் இவரது கவிதை இடம்பெற்றுள்ளன.

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு இவர் எழுதிய இரங்கல் பாடல் ‘வானே இடிந்ததம்மா’ அவரது சமாதியில் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் ஒலித்தன.

பொத்துவில் அஸ்மின் எழுதிய ‘ஐயோசாமி நீ எனக்கு வேணாம்’ பாடல் இலங்கையில் உருவாக்கப்பட்ட தமிழ் பாடல்களில் அதிக பார்வைகளை பெற்ற முதல் தமிழ் பாடலாகும்.

இலங்கையில் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் 30 மேற்பட்ட விருதுகளை பெற்றிருக்கும் பொத்துவில் அஸ்மின் கம்போடியா கலை கலாசார அமைச்சினால் ‘சர்வதேச கவியரசு கண்ணதாசன்’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.

பொத்துவில் அஸ்மின் வரிகளில் ஸ்ரீகாந்த் தேவா இசையில் ‘முல்லை சசி’ குரலில் ஸ்ரீதர்மாஸ்டர், காயத்ரிசான் நடிப்பில் வெளியான ‘முட்டக்கண்ணி’ ஆல்பம் பாடல், அமெரிக்காவில் அமைந்துள்ள சர்வதேச பாடலாசிரியர் சங்கம் (ISSA) வழங்கும் 2025ஆம் ஆண்டுக்கான விருதுக்கு சர்வதேச மட்டத்தில் சிறந்த வீடியோ பாடல் மற்றும் சிறந்த பாடலாசிரியர் என இரு பிரிவுகளில் தேர்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலஞ்சம் பெற்ற இருவருக்கு விளக்கமறியல்



■ பாறுக் ஷிஹான்அ

அம்பாறை மாவட்டம் கல்முனையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பிராந்திய காரியாலயத்தில் வைத்து பணி நீக்கம் செய்யப்பட்ட பேருந்து நடத்துநர் ஒருவரிடம் இருந்து இலஞ்சம் பெற முயற்சித்த குற்றச்சாட்டில் கைதான கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் ஒருவரையும் அங்கு கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஒழுக்காற்று குழு பரிசோதகர் தன்னிடம் 01 லட்சம் ரூபாய் இலஞ்சம் கோருவதாக பணிநீக்கம் செய்யப்பட்ட பேருந்து நடத்துனர் ஒருவர் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய சம்பவதினமான செவ்வாய்க்கிழமை(22) கல்முனையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பிராந்திய காரியாலயத்தில் வைத்து கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் கூறியமைக்கு அமைவாக அவரின் காரியாலய பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் இலஞ்சப் பணத்தில் ஒரு பகுதியைக் குறித்த நடத்துநர் வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு மாறுவேடத்தில் காத்திருந்த ஆணைக்குழுவின் அதிகாரிகள் கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகரையும் அங்கு கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரையும் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர்(வயது53) மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் (வயது-7) இருவரையும் கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (22) முன்னிலைப்படுத்திய போது 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மேலும் கடந்த காலத்தில் திருகோணமலை இலங்கை போக்குவரத்து சபையில் கடமையாற்றும் பேருந்து நடத்துநர் ஒருவர் மேற்கொண்ட நிதி மோசடி காரணமாக பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட நிலையில் அதற்கு எதிராக விசாரணையின் போது சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் பொருட்டும் மீண்டும் பணியில் குறித்த பேருந்து நடத்துநரை இணைத்துக் கொள்வதற்காகவும் குறித்த பணி நீக்கம் செய்யப்பட்ட பேருந்து நடத்துநரிடம் இருந்து மேற்படி கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் இலஞ்சம் கோரியதாகத் தெரியவருகிறது.

# சிறுமி கர்ப்பம்: குடும்பஸ்தர் கைது

படல்கும்புரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுகொடன் அராவ பகுதியில் வசிக்கும் மனநலம் பாதிக்கப்பட்ட 16 வயதான சிறுமியை கர்ப்பமாக்கிய குடும்பஸ்தர் செவ்வாய்க்கிழமை (22) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் சந்தேக நபர் 46 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை என தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக சுமார் நான்கு மாதங்களுக்கு முன்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவத்தின் பின்னர் சந்தேக நபர் அப்பகுதியை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வந்த தேடுதலுக்கமைய சந்தேக நபர் செவ்வாய்க்கிழமை (22) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமியைச் சிறுவர் பராமரிப்பு மையத்திற்கு அனுப்பப்பட்ட நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை படல்கும்புரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்து ஒருவர் பலி



மொனராகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹுளந்தாவ தெற்கு பகுதியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர், புதன்கிழமை(23) காலை தனது வீட்டின் முன் மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

மொனராகலை, ஹுளந்தாவ தெற்கு, வீட்டு எண் 8 ஐச் சேர்ந்த 38 வயதுடைய முத்துவாதுரயலாகே நிஷாந்த என்ற சிறு தொழிலதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் 21ஆம் திகதி மாலை ஹுளந்தாவ பாடசாலைக்கு அருகில் உள்ள மாமியார் வீட்டிற்கு சென்றிருந்தாகவும் 23ஆம் திகதி காலை 8.30 மணியளவில், அவரது மனைவியும் இறந்து போனவரின் சகோதரியும் அவரைப் பார்க்க வீட்டிற்குச் சென்றபோது, வீட்டின் முன் மோட்டார் சைக்கிளுடன் விழுந்து கிடந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தங்கத்துடன் இருவர் கைது

தலைமன்னார் - உறுமலை கடற்கரைப் பகுதியில் கடல் வழியாக கடத்தப்படவிருந்த தங்கத்துடன் இரண்டு சந்தேக நபர்களைக் கடற்படை கைது செய்துள்ளது.

இதன்போது சட்டவிரோதமாக இந்தியாவுக்குக் கொண்டு செல்லத் தயாராக இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் 8 கிலோ 960 கிராம் தங்கம் மீட்கப்பட்டுள்ளது.

கைதான சந்தேக நபர்கள் இருவரும் தலைமன்னார், உறுமலை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட தங்கம் மற்றும் படகுடன் சந்தேக நபர்கள் இருவரும் காங்கேசன்துறை சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 12 வயது சிறுமி நீரில் மூழ்கி மரணம்

■ எம்.எஸ்.எம்.ஹனீபா

ஒலுவில் பிரதேசத்தில் நீர் குட்டை ஒன்றில் குளிக்க சென்ற, ஒலுவில் 4ஆம் பிரிவைச் சேர்ந்த, 12 வயது எவ்.பாத்திமா ஹிக்மா நீரில் மூழ்கி இறந்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் உள்ள நீர் குட்டையில் செவ்வாய்க்கிழமை (22) மாலை நண்பி ஒருவருடன் குளிக்கச் சென்ற போதே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

மரணம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

சிறுமியின் சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# நீர் குழியில் இருந்து சிறுவனின் ஜனாஸா மீட்பு

■ பாறுக் ஷிஹான்



வீட்டின் அருகில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன், பாதுகாப்பற்ற நீர் குழியில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியான உடங்கா -02 பௌஸ் மாவத்தையில் செவ்வாய்க்கிழமை(22) மாலை இடம்பெற்றுள்ளது.

மூன்று வயதுடைய முஹம்மத் லுக்மான் என்ற சிறுவனே நீர் குழியிலிருந்து இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுமார் 3 மணித்தியாலமாக அப்பகுதியில் காணாமல் சென்றிருந்த குறித்த சிறுவனை பொதுமக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து தேடிய நிலையில், சிறுவனின் வீட்டிற்கு அருகில் உள்ள வெற்றுக் காணியில் உள்ள பாதுகாப்பற்ற நீர் குழிக்குள் மரணமடைந்த நிலையில், சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சிறுவனின் ஜனாஸா தற்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மூதாட்டி பாலியல் வன்புணர்வு; மக்கள் ஆர்ப்பாட்டம்

■ எஸ்.சதீஸ்



ஹட்டன் -டிக்கோயா போடைஸ் தோட்டத்தில் வசிக்கும் 74 வயது மூதாட்டி மீது, 24 வயது இளைஞன் ஒருவன் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை தொடர்பாக போடைஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 200 பேர் இணைந்து புதன்கிழமை (23) அன்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

சந்தேக நபரை செவ்வாய்க்கிழமை (22) அன்று ஹட்டன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, மே மாதம் 04ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதிமன்ற நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த தோட்ட பகுதியில் உள்ள இளைஞன் ஞாயிற்றுக்கிழமை (20) அன்று ஐஸ் போதைப்பொருள் பாவித்து விட்டு தனிமையில் இருந்த மூதாட்டி வீட்டின் ஜன்னலை உடைத்து வீட்டுக்குள் புகுந்து மூதாட்டியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. பாதிக்கப்பட்ட 74 வயது மூதாட்டி டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதோடு, சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை சந்தித்த ஹட்டன் பொலிஸார், சம்பவம் தொடர்பாக தெளிவுபடுத்திய பின்னர் மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர்.

# பாதாள உலகத்தை உண்மையிலேயே அடக்க முடியாதா?

நமது நாட்டில் பாதாள உலகம் சிறிது காலம் அமைதியாக இருந்தபோதிலும், அன்றாட இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை பார்க்குமிடத்து, மீண்டும் மிகவேகமாக தலைதூக்கியுள்ளதை அவதானிக்க முடிக்கின்றது. ஒவ்வொரு நாளும், நாட்டின் எங்காவது ஓரிடத்தில் துப்பாக்கிச் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கின்றது.

பல்வேறு பகுதிகளில் துப்பாக்கிகள் கைப்பற்றப்படுகின்றன. எனினும், ஒவ்வொரு நாளும் கொலைகளும் இடம்பெறுகின்றன. சிலர் பலியாகி விடுகின்றனர். இன்னும் சிலர் படுகாயங்களுடன் உயிருக்குப் போராடி வருகின்றனர். ஒருசிலர் புத்தி சாதுரியத்தால் தப்பித்துக்கொள்கின்றனர். அந்தளவுக்கு பாதல உலகம் ஆடத்தொடங்கி விட்டது.

பாதாள உலகம் என்பது தனிமையில் வளரும் ஒரு குழு அல்ல. அரசியல் மோசடி செய்பவர்களும், பாதாள உலகத்தின் வளர்ச்சிக்கு உணவளிக்கும் சில பொலிஸ் அதிகாரிகளும் இந்த நிலைமைக்குக் காரணமானவர்கள் என்பது, பாராளுமன்றத்தில் கடந்த காலங்களில் சிலர் ஆற்றிய உரைகளின் சாரம்சத்தில் இருந்து புலனாகிறது.

நம் நாட்டில் சட்டவிரோதத் துப்பாக்கிக் கடைகளின் உரிமையாளர்கள் பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, நாட்டில் எங்கும் ஒரு கொலை நடந்தால், அதில் பாதாள உலகம் சம்பந்தப்பட்ட பல வழக்குகள் உள்ளன. வழக்குகளுக்கு அழைத்துவரப்படுபவர்கள், நீதிமன்ற அறைக்குள் வைத்தும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒட்டுமொத்தமாக, நமது நாட்டில் நிகழும் குற்ற அலையையும், பாதாள உலக நடவடிக்கைகளையும் தடுக்கும் பொறுப்பிலிருந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தப்பிக்க முடியாது. பாதுகாப்புப் படையினர், குறிப்பாக, பாதாள உலகத்தை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களையும் செயல்படுத்தத் தயங்கக்கூடாது.

பாதாள உலக நபர்களால் மறைத்து வைக்கப்பட்ட துப்பாக்கிகளைக் காட்ட அவர்களை அழைத்துச் செல்வதில் எந்தத் தவறும் இல்லை. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பாதாள உலகம் ஆக்ரோஷமாக மாறினால், தகுந்த நடவடிக்கை எடுப்பது பாதுகாப்புப் படைகளின் பொறுப்பாகும்.

சட்டவிரோதத் துப்பாக்கிகள் மற்றும் பிற சமூக விரோத செயல்களிலிருந்து கிடைக்கும் லாபத்தில் பாதாள உலகம் செழித்து வளர்கிறது. போதைப்பொருள் கடத்தல் மற்றும் விநியோக வலையமைப்பின் பின்னணியில் உள்ள மூளையாகப் பாதாள உலகம் உள்ளது.

நாட்டில் போதைப்பொருள் கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு நடவடிக்கையை ஒரே நேரத்தில் தொடங்குவதும், அதே நேரத்தில் பாதாள உலகத்தைத் தோற்கடிப்பதும் மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் விற்பனையிலிருந்து கிடைக்கும் பில்லியன் கணக்கான டாலர்களால், பாதாள உலகம் தூண்டப்படுகிறது, அதை வழிநடத்தும் சக்திகள் ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்கின்றன. பாதாள உலகத்திற்கும் போதைப்பொருள் வர்த்தகத்திற்கும் இடையிலான இந்த நெருங்கிய தொடர்பை அழிக்காமல் ஒரு சிறந்த நாட்டை நாம் எதிர்பார்க்க முடியாது.

பாதாள உலகத்தை அடக்க வேண்டும் என்று நாங்கள் மட்டுமல்ல, பல தரப்பினரும் சிறிது காலமாக குரல் எழுப்பி வரும் விஷயம். சத்தம் இன்னும் நிற்கவில்லை. இந்தப் பாதாள உலகத்தை உண்மையிலேயே அடக்க முடியாதா? அதைச் செய்ய முடியும் என்பது எங்கள் நம்பிக்கையாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்

No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

சிறப்பான காதலை வீம்புடன் எவரும் புறம்தள்ளினால், எதிர்காலத்தில் ஏக்கநிலையில் வாழவேண்டி ஏற்படும். காதலின் ஆழம், எதிர்காலத்தில் நம்பிக்கையான பரஸ்பர அன்பையும் விட்டுக்கொடுப்பையும் அழுத்தமாக்குகின்றது. எதையும் உணராமல் நெஞ்சத்துக்கு வஞ்சகம் செய்வதுபோல், பிரிவதால் வரும் ஏக்கம், வாழ்வின் அந்தம்வரை தொடரும்.

குடும்பங்கள் மூலமாகவும் நண்பர்கள் மூலமாகவும் உறவினர்கள் ஊடாகச் சொல்லப்படும் விமர்சனங்களை காதில் செலுத்தினால், பலரும் உண்மை நிலைபற்றிச் சிந்திப்பதில்லை.

ஒருவரைப் பற்றி ஒருவர் உணர, கால அவகாவம் பிரதானமானது. தங்களது தெரிவு சிறப்பானது எனத் தெரிந்து கொண்டதன் பின்னர், மனம் அலை மோதக்கூடாது. ஆரம்பத்திலேயே சந்தேகத்துடன் பார்க்கப்பட்டால், நல்ல முடிவை எடுக்க முடியாது. இத்தகையவர்கள் பெற்றோரால் தீர்மானிக்கப்படும் தீர்மானங்களை ஆராயாமல் கெடுத்தும் விடலாம்.

காதல் கலைந்தால், சம்பந்தப்பட்ட ஆண், பெண் பழி தீர்க்கும் செயலில் ஈடுபடுவது தவறாகும். உண்மைக் காதலர் இணைந்தால் சிறப்பு.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ‘மாற்றம்’ என்ற மாயவலைக்குள் சிக்கியுள்ளனர்

முருகானந்தம் தவம்

இலங்கை சில மாத இடைவெளிக்குள் ஜனாதிபதித் தேர்தல்,பாராளுமன்றத் தேர்தல் என்ற இரு பெரும் தேர்தல் களங்களை எதிர்கொண்ட நிலையில், தற்போது மூன்றாவது தேர்தலாக எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்ளவுள்ளது.

இந்தத் தேர்தலில் இம்முறை தென்பகுதியை விடவும் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. அதிலும் வழக்கத்திற்கு மாறாக ஆட்சியிலுள்ள அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே .வி.பி.-என்.பி.பி. அரசு வடக்கு, கிழக்கு மாகாணங்களை முற்றாகவே கைப்பற்றிவிடும் நோக்கில் அடித்தாடத் தொடங்கியுள்ள நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கட்சிகள் அதனைத் தடுத்தாடும் வியூகங்களை அமைத்து பிரசாரப் போரைத் தீவிரப்படுத்தியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் 48,498 வாக்குகள், கிழக்கு மாகாணத்தில் 197,689 வாக்குகள் என மொத்தம் 246,187 வாக்குகளைப்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அனுரகுமார திசாநாயக்க வெற்றிபெற்று ஜனாதிபதியானதுடன் நடத்திய பாராளுமன்றத் தேர்தலில் அவர் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வடக்கு மாகாணத்தில் 5 பாராளுமன்ற ஆசனங்களையும் கிழக்கு மாகாணத்தில் 7 பாராளுமன்ற ஆசனங்களையும் கைப்பற்றிக்கொண்டது.

இந்நிலையில், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றி வடக்கு,கிழக்கை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தீவிரமான தேர்தல் பிரசாரங்களில் இறங்கியுள்ளது.

இதன் வெளிப்பாடாகவே தற்போது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கிழக்கு மாகாணத்திற்கான சூறாவளி பிரசாரப் பயணத்தை முடித்து 17ஆம் திகதி வடக்கு மாகாணத்திற்கான பிரசாரப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். இதற்கிடையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய வடக்கிற்கான பிரசாரப் பயணத்தை முடித்து கிழக்கு மாகாணத்திற்கான பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார்.இவர்கள் மட்டுமன்றி, அமைச்சர்கள் பலரும் என்றுமில்லாத வகையில் வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்குப் படையெடுக்கத் தொடங்கியுள்ளனர். தமிழ் மொழியிலும் திக்கித்திணறி உரையாற்றி தமிழ் மக்களையும் அவர்களின் வாக்குகளையும் கவர முற்படுகின்றனர்.

இவ்வாறு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மையப்படுத்தி ஜனாதிபதி அனுரகுமார தலைமையிலான ஜே.வி.பி.-என்.பி.பி. புயல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மையம் கொண்டுள்ள நிலையில், இந்த அனுர அரசுப் புயல் இனப் பிரச்சினை என்ற இலங்கையின் நீண்டகால கருவைக் கலைத்து விடுவதுடன், தமிழ்த் தேசிய அரசியலையும் வாரிச் சுருட்டிக்கொண்டு சென்று விடும் என்ற அச்சம் தமிழ்த் தேசிய வாதிகளிடமும் தமிழின உணர்வாளர்களிடமும் தற்போது ஏற்பட்டுள்ளது. அதற்கு நியாயமான காரணங்களும் உண்டு.

இவ்வாறாக வடக்கு, கிழக்கில் மையம் கொண்டுள்ள அனுர அரசு புயல், மிரட்டியும் அபிவிருத்தி ஆசைகாட்டியும் தமிழர்களின் உள்ளூராட்சி சபைகளைக் கபளீகரம் செய்து விடத் துடிக்கின்றமைதான் தமிழ்த் தேசிய அரசியலுக்கும் தமிழர் உரிமை சார் விடயங்களுக்கும். இனப் பிரச்சினை தொடர்பான சர்வதேசத்தின் நிலைப்பாட்டுக்கும் பேரச்சுறுத்தலாக மாறியுள்ளது. நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு பாடம் புகட்டுகின்றோம் என்ற ரீதியில் செய்த வரலாற்றுத் தவறான தேசிய மக்கள் சக்திக்கு 5 பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொடுத்ததன் விளைவுகளை தற்போது தமிழினம்தான் அனுபவிக்கின்ற நிலையில், உள்ளூராட்சி சபைகளும் பறிபோய்விடுமோ? என்ற அச்சம் எழுந்துள்ளது. நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெற்ற வாக்குகளையும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட பாராளுமன்ற ஆசன எண்ணிக்கையையும் வைத்துக்கொண்டு, தமிழ் மக்கள் முதல் தடவையாக சிங்கள ஜனாதிபதியையும் சிங்கள கட்சி ஒன்றின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் வடக்கு, கிழக்கில் தெரிவு செய்துள்ளனர். எனவே, தற்போது நாட்டில் இனப் பிரச்சினை என எதுவும் கிடையாது என அனுரகுமார அரசு சர்வதேச மட்டத்தில் தீவிர பிரசாரங்களில் இறங்கியுள்ளது.

அதனை மேலும் உறுதிப்படுத்தவே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்கு,கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மக்கள் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு 5 பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொடுத்ததனால் வடக்கு, மாகாணத்திற்கு ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் அடிக்கடி விஜயம் செய்து தமிழ்மக்கள் தொடர்பில் அக்கறையுள்ளவர்கள் போல் காட்டிக்கொள்வதுடன், கிழக்கு மாகாணத்தில் தமிழர் பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்களினால் புறக்கணிக்கப்பட்டதனால் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர் பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் உள்ளூராட்சி சபைகளுக்கு மட்டுமே அரசு நிதி ஒதுக்குமென மிரட்டுவதுடன் தமது வாக்கு வங்கிக்கு சவாலாக.இடையூறாக இருப்போரை கைது செய்வது, கைது செய்யப்படுவீர்கள் என மிரட்டுவதுமென இரு வியூகங்களில் களம் இறங்கியுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் இந்த இரு வியூகங்களில் முதலாவது வியூகம் தற்போது வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. பலவருடங்களாக மூடப்பட்டிருந்த வீதி திறக்கப்படுகின்றது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேகத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய பங்கேற்கின்றார். வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் யாழ்ப்பாணம் சென்று, தான் தமிழ் மொழியில் பேச விரும்புவதாகக்கூறித் திக்கித்திணறி ஓரிரு வார்த்தைகள் தமிழில் பேசுகின்றார். தையிட்டி சட்டவிரோத விகாரை நிலைமைகளை ஆராயவென அமைச்சர்கள் விஜயம் செய்கின்றனர். யாழ்ப்பாணம் அச்சுவேலி நவக்கிரி சித்த மருத்துவமனைக்கு சொந்தமான 2 ஏக்கர் காணி 30 வருடங்களின் பின்னர் இராணுவத்தினரால் மீளக்கையளிக்கப்படுகின்றது. தற்போது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் வடக்கிற்குச் சென்றுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் இந்த இரு இரு வியூகங்களில் இரண்டாவது வியூகம் தற்போது கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. அந்த வகையில்தான் மட்டக்களப்பு மாநகர சபை தேசிய மக்கள் கட்சியின் கையில் இருந்தால்தான் நிதி வழங்கப்படும் என்று மட்டக்களப்பில் வைத்தே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பகிரங்கமாகக் கூறி தமிழ் மக்களை அச்சுறுத்தியுள்ளார். இது அப்பட்டமான தேர்தல் சட்ட விதிமுறை மீறல். அடுத்ததாக முன்னாள் இராஜாங்க அமைச்சர்களும் கட்சிகளின் தலைவர்களுமான தமிழ் வாக்குகளை ஓரளவுக்கு கவரக்கூடிய வியாழேந்திரன், பிள்ளையான் ஆகியோரின் கைது. இதில் வியாழேந்திரன் பிணையில் வெளிவந்துள்ள நிலையில், பிள்ளையான் தொடர்ந்தும் சிறையில் உள்ளார். அதேவேளை, தேசிய மக்கள் சக்தி அரசையும் ஜனாதிபதியையும் அதிகம் விமர்சிக்கும் தமிழரசுக்கட்சியின் சாணக்கியன் எம்.பியும் எவ்வேளையிலும் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கைதாகலாம் என தகவல்கள் கசிய விடப்பட்டுள்ளன.

இவ்வாறாக அபிவிருத்தியைக் காட்டியோ, அச்சுறுத்தியோ வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றிவிட அனுரகுமார அரசு தீயாய் வேலை செய்து வரும் நிலையில், தமிழர் தாயகம் முற்று முழுதாக பேரினவாதிகளின் கைகளுக்குச் சென்று விடும் நிலைமையும் இல்லாமல் இல்லை. ஏனெனில், கடந்த ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடையில் ஏற்பட்ட பிணக்குகள், பிளவுகள் சீர்செய்யப்படாது பிரிவினைகள் தொடர்வதனால் தமிழர்களும் கடந்த தவறை மீண்டும் செய்வதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

எனவே, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மையம் கொண்டுள்ள ‘அனுர புயல்’ தமிழர் பிரதேச உள்ளூராட்சி சபைகளை அள்ளிச் செல்லுமா? தமிழ்த் தேசிய அரசியலையும், தமிழர் உரிமைக் கோஷங்களையும் தூக்கிச் சுழற்றி அடிக்குமா? இனப் பிரச்சினை என்ற விடயத்தைக் காணாமல் போகச் செய்யுமா? என்ற கேள்விகளுக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒவ்வொருவரும் தமிழனாகவும், தன்மானத் தமிழனாகவும் தடம்மாறாத் தமிழனாகவும் தமிழ்த் தேசிய இனமாகவும் பதிலளிக்க, வாக்களிக்க வேண்டிய தீர்க்கமான தேர்தலாக எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அதனால்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் பிளவுண்டு கிடந்தாலும், இந்த ஜே .வி.பி.-என்.பி.பி. அரசை எதிர்ப்பதிலும் வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகள் அரசின் கைகளுக்குச் சென்று விடாது தடுப்பதிலும் ஓரணியாகத் தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளன. அவ்வாறு சென்று விட்டால் தமிழர் தற்போது கட்டியிருக்கும் கோவணமும் உருவப்பட்டு விடும் என்பதை ‘மாற்றம்’ என்ற மாயவலைக்குள் சிக்குண்டிருக்கும் தமிழ் இளையோருக்குப் புரிய வைக்க படாதபாடுபடுகின்றன.

## கடிதங்கள்

### சுற்றுலாப் பயணிகள் கோரிக்கை

கிழக்கு மாகாணத்தில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமான மட்டக்களப்பு - பாசிக்குடா கடற்கரைக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதை அவதானிக்க முடிகிறது.

சித்திரைப் புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குடும்பத்துடன் வந்து, மகிழ்ச்சியான முறையில் பொழுதைக் கழிக்க கடலில் நீராடுவதோடு, விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடற்கரை பகுதியில் இரண்டு மலசலக்கூடங்கள் மாத்திரமே காணப்படுவதால் பெருந்திரளாகக் கடற்கரைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் தங்களுடைய இயற்கைத் தேவைகளை நிறைவேற்ற பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் வாழைச்சேனை பிரதேச சபை நிர்வாகத்தினர் கவனம் செலுத்தி அடிப்படை வசதிகளை நிறைவேற்றித் தருமாறு சுற்றுலாப் பயணிகள் கேட்டுக் கொள்கின்றனர்.

– எச்.எம்.எம்.பர்ஸான்



# சிறுவர் சமூகமயமாக்கலில் கார்ட்டூன்கள்

மாணிக்கப்போடி நனுஷிகா
நான்காம் வருட சிறப்பு கற்கை மாணவி,
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை
(B-ed), கிழக்குப் பல்கலைக்கழகம்.

குழந்தைகள் தாம் பேசத் தொடங்கும், நாட்களில் இருந்தே தாம் பார்க்கும், கேட்கும் விடயங்களை ஏன்? எதற்கு? எவ்வாறு? என வினவத் தொடங்குகின்றனர். அதன்படி சோறூட்டுவதற்காகவும், அழுகையை நிறுத்துவதற்காகவும் காட்சிப்படுத்தப்பட்ட கார்ட்டூன்கள் பிற்காலத்தில் குழந்தைகளின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்து பொழுதுபோக்காக வளர்ச்சியடைந்துள்ளமையினை எம்மால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதனால் சிறுவர்களிடையே பல ஏற்றுக்கொள்ளக் கூடிய மாற்றங்கள் எழுச்சி அடைந்துள்ளமையை இன்று எம்மால் அவதானிக்க முடிகிறது. கார்ட்டூன் பார்ப்பதால் தமது குழந்தைகள் படிப்பில் கவனம் செலுத்த மாட்டார்கள், சரியாகப் பேச மாட்டார்கள் எனும் கார்ட்டூன் அச்சம் பெற்றோர்களிடையே இன்றும் நிலவுகிறது. சிறுவர் கார்ட்டூன்கள் என்பது குழந்தைகளுக்குப் பொருத்தமான அவர்களது அறிவு மற்றும் கற்பனைத் திறனை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட கலை வடிவமாகும்.

கார்ட்டூன்கள் சிறுவர்களின் மொழி விருத்தி மற்றும் அறிவுத்திறன் மேம்பாட்டிற்கு முக்கியமான பங்கு வகிக்கின்றன எனலாம். குழந்தைகள் கார்ட்டூன்களைப் பார்க்கும் போது, புதிய சொற்கள், வாக்கியங்கள் மற்றும் மொழி சம்பந்தப்பட்ட திறன்களைக் கற்றுக்கொள்கிறார்கள். இது சிறுவர்களின் வார்த்தை நிலை, உரையாடல் திறன், மற்றும் சமூக நிலைப்பாடுகளை மேம்படுத்த உதவுகிறது. ஆங்கில மொழி மூலமான கார்ட்டூன்களின் வாயிலாக ஆங்கில மொழி உச்சரிப்பு,ஆங்கிலச் சொற்களின் பயன்பாடு தொடர்பாக அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இவை குழந்தைகளுக்குப் பிற்காலத்தில் ஆங்கில மொழியில் திறமையாகப் பேசவும், சிறந்த கிரகிப்புத் தன்மையை வளர்த்துக் கொள்ளவும் வழிகாட்டுகின்றது.

கார்ட்டூன்கள் மொழி மற்றும் உரையாடலைப் பயன்படுத்தி மற்றவர்களுடன் எப்படிப் பேச வேண்டும். என்பதைக் கற்றுக் கொடுக்கும். அதேவேளை எளிதாக மனித உறவுகளைப் புரிந்து கொள்வதையும், நண்பர்களுடன் உரையாடும் முறைகள், உதவி செய்யும் மனப்பாங்கு என்பனவற்றைக் கற்றுக்கொடுக்கும் ஊடகமாகவும் கார்ட்டூன்கள் விளங்குகின்றன. கார்ட்டூன்களில் பெரும்பாலும் கதாபாத்திரங்கள் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வேலை செய்வதையும், சமூக உறவுகளையும் சுற்று கொடுக்கின்றன எனலாம்.

சில கார்ட்டூன்கள் குழந்தைகளுக்கு நல்ல பழக்கங்களை பின்பற்றவும், தவறுகளைத் தவிர்க்கவும் வழிகாட்டுகின்றன. இவற்றுக்கு உதாரணமாக நேர்மையுடன் செயற்படுதல், பிறருக்கு மரியாதை காட்டுதல் போன்றவற்றை குறிப்பிடலாம். மேலும் கார்ட்டூன்களில் காட்டப்படும் வித்தியாசமான சமூக கருத்துக்கள் குழந்தைகளுக்கு பல்வேறு மக்கள் இனங்களின் உடைய சமூகக் கலாச்சாரங்களை புரிந்துகொள்வதில் உதவுகின்றது.

கார்ட்டூன்கள், கற்பனை மற்றும் நகைச்சுவை முறைமை மூலம் குழந்தைகளுக்கு ஒரே நேரத்தில் ஆழமான பேச்சுத்திறனையும் படைப்பாற்றலையும் ஊக்குவிக்கின்றது எனலாம். கார்ட்டூன்கள் குழந்தைகளின் சமூக சமூகவியல் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும், அதேவேளை, அவர்கள் வாழ்க்கையின் அடிப்படைத் திறன்களான சமூக உறவுகள், குழு வேலை, அன்பு, நேர்மை முதலான அம்சங்களையும் கற்றுக் கொடுக்கின்றன. இது குழந்தைகள் சமூக உறவுகளை வளர்ப்பதற்கும், எதிர்காலத்தில் திறமையான பேச்சாளர்களாக உருவாக்கும் வழிகாட்டியாகவும் கார்ட்டூன்கள் திகழ்கின்றன.



சிறப்பு நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ள நிலையில், குழந்தைகளின் கல்வி, சமூக மற்றும் உணர்வு வளர்ச்சிக்கு உதவும் சில கார்டூன்களையும் சிலர் பரிந்துரைக்கின்றனர். இவை குழந்தைகளின் அறிவுத்திறன், கற்பனை மற்றும் சிந்தனைத் திறன்களை மேம்படுத்த உதவுகின்றன. உதாரண ரோட்ராமன் (Doraemon) எனும் கார்ட்டுனாது குழந்தைகளின் சமூகத்திறன்களை மேம்படுத்துவதோடு தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்துவதுடன் பெலப்பா பிக் (Peppapi) எனும் கார்ட்டுனானது குழந்தைகளுக்கு வாழ்வியல், குடும்ப உறவுகள் பற்றிய விடயங்களைக் கற்றுக்கொடுப்பதுடன், செசாமி ஸ்ட்ரீட் (Sesame Street) எனும் கார்ட்டூனானது எண்ணிக்கை, எழுத்து என்பவற்றைக் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பதுடன் அவர்களின் மொழித்திறனையும் விருத்தி செய்கிறது என சிறப்பு நிபுணர்கள் கூறுகின்றனர்.

கார்ட்டூன் தொடர்களின் பின்னணி மிகப் பயங்கரமானது. எந்த ஒரு கார்ட்டூனும் தற்செயலாக உருவாக்கப்படுவதில்லை. அவை அனைத்தும், குறிப்பிட்ட ஒரு நோக்கை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றன.

உதாரணமாக, ஒரு பூனை, எலியை பிடிப்பதை மையமாக வைத்துக் கார்ட்டூன் எடுக்கப்படுகின்றது என வைப்போம். இதை பார்க்கும் போது எவ்வித பாதகமும் தெரிவதில்லை. ஆனால், அந்தப் பூனை எலியைப் பிடித்து, கொன்று சாப்பிடுவதில்லை. எத்தகைய துன்புறுத்தல்களைச் செய்ய முடியுமோ அதை அனைத்தையும் அந்த எலிக்குப் பூனை செய்கிறது. எலி இறந்த பிறகு பூனை மகிழ்கிறது. ‘நீங்கள் சிரிக்க வேண்டுமாயின் அல்லது உங்களுக்கு மகிழ்ச்சி தேவையாயின் அதற்காக மற்றவரை நோகடிக்க வேண்டும் என்ற தகவலை அந்தக் கார்ட்டூன் வழங்குகின்றது. எனவே, போதைக்கு அடிமையாவது போல், சிறுவர்கள் இத்தகைய கார்ட்டூன்களுக்கு அடிமையாகி மற்றவரை துன்புறுத்தி மகிழும் நிலைக்கு மாற்றப்படுகின்றனர். மேலும் பூவைக் கசக்கியப் பின்னர், நுகராமல் வீசி எறிவது அக மகிழ்ச்சி காண்கின்றனர்.

இது அனைத்து இடங்களிலும் நடக்கின்றது. பாலியல் வன்கொடுமைகளுக்கு இதுவும் ஒரு காரணமாகும் என ஆய்வுகள் கூறுகின்றன..


மேலும் இன்றும் மிகவும் பிரபலமாகப் பேசப்படும் நரோட்டோ, மொட்டு பட்லு முதலிய சில கார்ட்டூனானது தவறான நடத்தைகள் மற்றும் பாதிப்பை சிறுவர் மத்தியில் ஏற்படுத்துகின்றன எனலாம். உதாரணமாக இக் கார்ட்டூன்களில் காட்டப்படும் வன்முறை மற்றும் போர்களில் ஒரு சாதாரண நிலை என்று கருதி அதனைத் தனிப்பட்ட முறையில் சிறுவர்கள் கையாள்வதற்கான வாய்ப்பு அதிகளவில் காணப்படுகின்றன. இக் கார்ட்டூன்களில் காட்டப்படும் அசாதாரண நிலைமைகளை உண்மை என நினைத்து குழந்தைகள் தாம் வாழும் இடத்தில் பிரச்சனையை ஏற்படுத்தும் வாய்ப்பு அதிக அளவில் காணப்படுகிறது.

மேலும் நரோட்டோ கார்ட்டூன் மூலம் சிறுவர்களிடையே பழிவாங்கும் எண்ணமும் மனப்பான்மை உருவாவதுடன், பிறரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது தனிப்பட்ட ரீதியில் முடிவுகளை எடுப்பவர்களாகவும் மாற்றிக்கொள்கின்றனர். இதனால் பிற்காலத்தில் சிறுவர்களின் குடும்ப வாழ்விலும் சரி சமூக வாழ்விலும் சரி தனிமைப்படுத்தப்பட்ட நிலைமையைச் சந்திக்க நேரிடுகிறது. இவ் நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு குழந்தைகளுடன் சரியான வழிகாட்டலை மேற்கொண்டு சரியான செயல்கள், தவறான செயல்கள் தொடர்பான விளக்கத்தை வழங்க வேண்டியது அனைத்து பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களது பொறுப்பாகும்.

இலண்டன் போன்ற நாடுகளுடன் எமது நாட்டை ஒப்பிடும்போது, எமது நாட்டில் பெற்றோர், தமது குழந்தைகளைத் தொடர்பு கொள்ளும் அளவு மிகக் குறைவாகவே உள்ளது. பெற்றோர் இயன்றவரைப் பிள்ளைகளுடன் நெருங்கிப் பழக வேண்டும். அதுவே, பிள்ளைகளைத் திறமைசாலிகளாக உருவாக்குகின்றது. இதன் போது, அவர்களது பலத்தையும் பலவீனத்தையும் பெற்றோர் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்’ என்றார்.

# பெட்டிக்கடை

றொசில்டா அன்டன்



“மகள்... உன்னை படிக்க வைத்தது அரசாங்க வேலை ஒன்று செய்ய வேண்டும். கடைசி காலத்தில் நாங்க இல்லை என்றாலும் நீ நிம்மதியாக வாழுவாய் என்று நினைச்சு தான் படிப்பிச்சன் ஆனால் நீ ஏன் இந்த வேலையை கையில் எடுத்தாய்” அம்மா இரண்டு நாளாய் அழுத வண்ணம்.....

அண்ணா மூத்தவர் மாற்று திறனாளி நான் இரண்டாவது மூன்றாவதாய் தங்கை இருவர் இரட்டையர்கள் அப்பா ஒரு கிழமைக்கு முன் மாரடைப்பால் தீடிரென்று இறந்து போயிட்டார். அந்த கிராமத்தில் அப்பாவை தெரியாதவர்கள் இல்லை.

சுற்று வட்டார கிராம மக்களும் அவ்வளவு பழக்கம். அப்பா பெட்டிக்கடை வைத்திருந்தார்.

கடையை பத்து மணிக்குத் தான் பூட்டுவார். வீட்டுக்கு வந்தப்பின்பும் சில நேரங்களில் வாசல் கதவு தட்டப்படும் ஓசை கேட்கும். அலுப்பு இல்லாமல் கடையை திறந்து வந்தவர்களின் தேவையை பூர்த்தி செய்தப்பின்பே வீடு வருவார். அண்ணாவால் கதைக்க முடியாது, நடக்கவும் மாட்டான். சக்கரநாற்காலியின் உதவியுடன் தான் அவனின் வாழ்க்கை...

தங்கை இருவரும் படிப்பில் கெட்டிக்காரிகள். அப்பாவின் வருமானம் ஒன்றில் தான் எம் வாழ்க்கைச் செலவுகளும் சென்றுக்கொண்டிருந்தது. அம்மாக்கும் சீனி வருத்தம். இந்த நிலையில், தான் எனது படிப்பும் உயர்தரம் பரீட்சை முடிவுற்ற தருணம். பரீட்சை முடிவு வரும் வரை சிறிது காலம் அப்பாக்கு உதவியாக கடையில் இருப்பேன். அப்பவே அப்பாட நெருங்கிய உறவுகள் சொல்லுவினம்

“என்ன ராசு உங்கட செல்ல மகள் கடையை பொறுப்பு எடுத்திட்டாள் போல” என்று

அப்பாவும் “ அவள் என்ட மகளாச்சே துணிவாக எதையும் செய்ய கற்றக்கொடுக்க தானே வேண்டும்.” என்பார்.

எங்களுக்கு என்று சொந்தமான வீடு இருந்தப்படியால நிம்மதியாக வாழ்ந்தோம்.

கடையை பொறுப்பெடுத்த நாள் தொடங்கி பலரும் என்னை அதிசயமாக பார்ப்பார்கள். சிலர் கேட்பாங்க “ என்னம்மா தீபா அப்பாக்கு

பிறகு குடும்ப பொறுப்பு உன் தலையில் வந்துட்டு போல இருந்தாலும் உன்னை படிக்க வைச்சு அழகு பார்த்தார். இப்ப நீ அப்பாட இடத்திற்கு வந்துட்டாய்.

துணிவுள்ள பெண்ணம்மா நீ “ என்று கடைக்கு வரும் ஊர்காரரர் ஒருவர் சொல்லி விட்டு தனக்கு தேவையான. மலர் பொதியினை பெற்றுக்கொண்டு சென்றார்.

அம்மாக்கு இன்று வைத்தியசாலை செல்லும் நாள் என்பதால் நேரத்துடனே வீட்டு வேலைகளையும், சமையல் வேலைகளையும் செய்து விட்டு அம்மாவையும் பஸ் ஏற்றி அனுப்பி விட்டு கடைக்கு வந்தேன்.

காலையில கடை வாசலில் ஐந்தாறு பேர் காத்திருந்தார்கள்.

நான் கடையை த் திறந்து கூட்டி பெருக்கி , மஞ்சள் தண்ணி தெளித்து, சாமி படத்திற்கு பூ வைக்கும் வரை.காத்திருந்தார்கள். வந்தவர்களுக்கு தேவையான பொருட்களை வாகனத்தில் ஏற்றினார்கள். வேகமாக வாகனம் அந்த இடத்தை விட்டு அகன்றது.

வாகனம் வேகமாக சென்றதை வெறித்துப் பார்த்தவளாய்...

அயல் ஊர்காரரர்களும் அப்பாவின் கடையைத் தேடி வருவார்கள்.

எமது கிராமத்திலிருந்து நகர்புறம் செல்வதற்கு பலமணி நேரம் ஆகும் என்பதால் எங்கள் பெட்டி கடை அனைவருக்கும் உதவியாக இருந்தது.

கல்லும், முரடும் நிறைந்த இந்த பாதையால் அப்பாவுடன் கைப்பிடித்தப்படி கதைகள் பல அளந்தவளாய் “அப்பா நான் படிச்சு முடிஞ்சதும் நல்ல வேலையும் கிடைச்சிடும். பிறகு நீங்க கஸ்டப்படவே தேவையில்லப்பா சாமத்திலும் எழுந்து வந்து இந்தக்கடையைத் திறந்து யாருக்கு என்ன தேவையோ அதை செய்றிங்க. பாவம் அப்பா நீங்க. எங்களுக்காக எவ்வளவு கஸ்டம் படுறிங்க.” “நான் கஸ்டப்பட்டாலும் நீங்க மூவரும் நல்லா படிச்சு நல்ல நிலைக்கு வந்தால் போதும்” என்பார் அப்பா.

அப்பா இந்த ஊரில் மதிப்பு மிக்கவராய் வாழ்ந்தார். யார் மனதையும் நோகடிக்க மாட்டார்.

அண்ணாவின் தேவைகள் அனைத்தையும் அப்பா தான் கவனிப்பார். குரல் உயர்த்தி கதைக்கவே மாட்டார். அவருடைய தீடிர் மறைவு என்னை நிலை குலையச் செய்தது.

வீட்டில் அம்மாவை இறுத்தி விட்டு கடையை முழு பொறுப்பும் எடுத்தேன்.

உறவுகள் ஏளனமாய் பார்த்தார்கள். அந்த ஏளனப் பார்வையின் அர்த்தம் புரிந்தது.” என்ன தீபா பாதிலயே படிப்பை நிறுத்திட்ட போல” சித்தியின் பேச்சு இது. “இனி தீபா தானே முழு குடும்ப பொறுப்பும் அது தான் கடையை பொறுப்பெடுத்துட்டா போல” இது மாமா.

இப்படியாக உறவுகளின் ஏளனப் பேச்சுக்களுக்கிடையில் எனது உயர்தர பரீட்சை பெறுபேறும் வந்திருந்தது. கல்லூரிக்கு செல்லும் வாய்ப்பும் கிட்டியது.

அப்பாவின் ஆசைகளில் ஒன்று நிறைுவேறியது. ஆனால் அம்மா தான் ஒரே அழுகை அவளை கட்டுப்படுத்தவே முடியல. “அம்மா நான் கல்லூரி போவதைப் பற்றி எந்த திட்டமும் எனக்கில்லை. தங்கை இருவரையும் படிக்க வைக்க வேண்டும். அவர்களின் வாழ்க்கைப் பற்றி சிந்திக்க வேண்டும். உங்களையும், அண்ணாவையும் தனிக்க விட முடியாது. கடையை நான் பொறுப்பு எடுக்கிறேன்” என்றதுமே அம்மா என்னை கட்டிப்பிடித்து அழுதாள்.

காலம் வேகமாக சுழன்றது. தங்கச்சி இருவருமே கல்லூரிக்கு சென்று விட்டார்கள். அம்மா அண்ணாவை பார்த்துக்கொண்டாள். தீபாவின் நண்பன் சுரேஸ் அவளை உயிராக காதலிப்பதை அறிவாள். கரிசனமாய் நலம் விசாரிப்பான். அவன் படிப்பை முடித்தும் வேலை இன்னும் கிடைக்கவில்லை. கிடைக்கும் சிறிய வேலைகளை செய்து வந்தான்.

சுரேஸ்க்கு தாய் மட்டும் தான் . அவனுடை சிறிய வயதிலயே அப்பா விபத்தொன்றில் காலமாகிவிட்டார். தீபாவின் வீட்டு நிலமையை அறிவான்.

அவளிடம் தனது காதலை சொல்லிய போதும் தனது இரண்டு தங்கைகளின் கல்லூரிப் படிப்பு முடியும் வரை காத்திருக்கச் சொன்னாள்.

“சுரேஸ் என்ன இந்த பக்கம்” “இல்ல தீபா அம்மா காலமாகிட்டாங்க அது தான் வந்தேன்”. அவளால் எதுவுமே கதைக்க முடியவில்லை. கண்கள் சிவந்து அழுதழுது சோர்வுற்றவனாய் இருந்தான். பாவம் இனி இவனுக்கு நாம் தான் எல்லாம் என்று நினைத்தவளாய் அவனை கட்டிப்பிடித்து அழுதாள்.” உங்களுக்கு நானிருக்கன் இனி எல்லாமாக இருப்பேன்” அவன் கண்களும் அதற்கு “ஆம்” என்றது. அவனின் அம்மாட இறுதி கிரிகைக்கு கடையிலிருந்து தேவையான பொருட்களுடன், சவப்பெட்டியும் வாகனத்தில் கலங்கிய கண்களுடன் ஏற்றி அனுப்பி வைத்தேன்.



ஜம்மு–காஷ்மீர்

பஹல்காமில் சுற்றுலா பயணிகள் மீது

# பயங்கரவாத தாக்குதல்

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் பகுதி பைசரன் பள்ளத்தாக்கில் சுற்றுலாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் செவ்வாய்க்கிழமை (22) துப்பாக்கி சூடு நடத்தியதில் 28 பேர் உயிரிழந்தனர். மேலும், 40க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

ஜம்மு-காஷ்மீரில் தற்போது கோடைசுற்றுலா தொடங்கியுள்ளதால், அங்கு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் செல்கின்றனர். அங்குள்ள அனந்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காம் மலைப்பகுதியில் அடர்ந்த வனப்பகுதிகள், தெளிவான நீரோடைகள், பரந்த புல்வெளிகள் இருப்பதால், இது 'மினி சுவிட்சர்லாந்து' என அழைக்கப்படுகிறது. இதனால் பஹல்காம் பிரபல சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. இங்குள்ள பைசரன் பள்ளத்தாக்கு பகுதிக்கு வாகனங்களில் செல்ல முடியாது. கால்நடையாக அல்லது குதிரைகள் மூலமாக மட்டுமே செல்ல முடியும்.

இங்கு சென்ற சுற்றுலாப் பயணிகள் சிலரை இராணுவ உடையில் வந்த தீவிரவாதிகள் செவ்வாய்க்கிழமை (22) பிற்பகல் 3 மணியளவில் சுற்றி வளைத்தனர். அவர்களிடம் பெயர் மற்றும் மதத்தைத் தீவிரவாதிகள் கேட்டு துப்பாக்கிச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டதும், சுற்றுலாப் பயணிகள் இங்கும், அங்கும் ஓடினர். திறந்தவெளி என்பதால், சுற்றுலாப் பயணிகளால் துப்பாக்கிச் சூடு தாக்குதலில் இருந்து தப்பிக்க முடியவில்லை.

இத்தாக்குதலில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர், 40க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்திய இடத்துக்குப் பாதுகாப்புப் படையினர் விரைந்து சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.




காயம் அடைந்தவர்களை உள்ளூர் மக்கள் குதிரைகள் உதவியுடன் மீட்டு அழைத்துவந்தனர். அதன்பின் அங்கு இராணுவ ஹெலிகாப்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டு காயம் அடைந்தோர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

காஷ்மீரின் புல்வாமா பகுதியில் சிஆர்பிஎப் வீரர்கள் மீது தீவிரவாதிகள் 2019இல் நடத்திய தாக்குதலில் 47 வீரர்கள் உயிரிழந்தனர். அதன்பின் தீவிரவாதிகள் நடத்திய மிகப் பெரிய தாக்குதல் இது.

அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், இந்த தீவிரவாத தாக்குதல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சவூதி அரேபியா சென்றிருக்கும் பிரதமர் மோடி, தீவிரவாத தாக்குதல் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடம் கேட்டறிந்தார். இந்நிலையில் டெல்லியில் அவசர கூட்டத்தை அமைச்சர் அமித் ஷா கூட்டினார்.

தொடர்ந்து காஷ்மீருக்கு விரைந்த அமித் ஷா, அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

காஷ்மீரில் இந்தாண்டு அமர்நாத் யாத்திரை ஜூலை 3ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்த யாத்திரை அனந்த்நாக் மாவட்டத்தின் பஹல்காம் வழியாகவும், கந்தர்பால் மாவட்டத்தின் பால்தால் வழியாகவும் நடைபெறும். இந்நிலையில் இந்த தாக்குதல் சம்பவம் அமர்நாத் யாத்திரையின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கி உள்ளது.

ஜம்மு–காஷ்மீர்

## ஆண்களையே குறிவைத்தனர்

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகளில் கொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் ஆண்கள் ஆவர் எனவும், அவர்களுடன் சுற்றுலா சென்றிருந்த பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பயங்கரவாதிகள் எதுவும் செய்யாமல் விட்டுவிட்டனர் எனவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், துப்பாக்கிச் சூட்டுக்கு முன்பாக இஸ்லாமிய வாசகத்தை ஓதுமாறு எனது தந்தையைப் பயங்கரவாதிகள் வற்புறுத்தினர். அவர் மறுத்த காரணத்தால் துப்பாக்கியால் சுட்டனர்" என்று ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் தாக்குதல் பயங்கரத்தை இளம்பெண் ஒருவர் விவரித்துள்ளார்.



ஜம்மு–காஷ்மீர்

## தாக்குதலை பொறுப்பேற்ற அமைப்பு

தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் பயங்கரவாதிகளுக்கு எதிராக துப்பாக்கிச் சூட்டு வேட்டையில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.


தற்போது பயங்கரவாதிகளைப் பிடிக்க டிரோன்கள், மோப்ப நாய்கள் உதவியுடன் தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஹெலிகொப்டர்கள் மூலம் மலைப்பகுதிகளில் தீவிர கண்காணிப்பு பணி நடைபெற்று வருகிறது.

இந்த தாக்குதலுக்குப் பாகிஸ்தான் பயங்கரவாதி ஹபீஸ் சயீத்தின் லஷ்கர்-இ-தொய்பா (LeT) இன் பினாமி அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் ப்ரண்ட் (TRF) என்ற அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளது.

பாகிஸ்தான்

## தாக்குதலை மறைக்கும் பாகிஸ்தான்?

ஜம்மு -காஷ்மீர் தாக்குதலில் ஏற்பட்ட உயிர் இழப்பு குறித்து பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில், அதை பயங்கரவாதச் செயல் என்று விவரிக்கவோ, கண்டிக்கவோ இல்லை என, சர்வதேச ஊடகங்கள் குற்றஞ்சாட்டி செய்தி வெளியிட்டுள்ளன.



பாகிஸ்தான்

ஜம்மு–காஷ்மீர் தாக்குதல்:

## 'எங்களுக்கு தொடர்பில்லை'

ஜம்மு -காஷ்மீர் பயங்கரவாத தாக்குதலுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என்று பாகிஸ்தான் அரசு விளக்கம் அளித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் கவாஜா ஆசிப் கூறுகையில், "பாகிஸ்தானுக்கு இந்த சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. நாங்கள் பயங்கரவாதத்தை ஆதரித்ததில்லை, எனவே இதற்கு பாகிஸ்தானை குறை கூற வேண்டாம்.

"இது அனைத்தும் உள்நாட்டில் உருவாக்கப்பட்டது. இந்தியாவுக்கு எதிராக பல்வேறு மாநிலங்கள் என்று அழைக்கப்படுபவற்றில் புரட்சிகள் உள்ளன, ஒன்றல்ல, இரண்டல்ல, டஜன் கணக்கானவை, நாகாலாந்து முதல் காஷ்மீர் வரை, தெற்கில், சத்தீஸ்கர், மணிப்பூரில். இந்த எல்லா இடங்களிலும், இந்திய அரசாங்கத்திற்கு எதிரான புரட்சிகள் உள்ளன.

"இந்துத்துவ சக்திகள் மக்களைச் சுரண்டுகின்றன, சிறுபான்மையினரை அடக்குகின்றன, கிறிஸ்தவர்களையும் பவுத்தர்களையும் சுரண்டுகின்றன. அவர்கள் கொல்லப்படுகிறார்கள், இது அதற்கு எதிரான புரட்சி, இதன் காரணமாகவே இதுபோன்ற நடவடிக்கைகள் அங்கு நடக்கின்றன" என்று அவர் தெரிவித்துள்ளார்.




இங்கிலாந்து பிறீமியர் லீக்

# வில்லாவை வென்ற சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் புதன்கிழமை (23) நடைபெற்ற அஸ்தன் வில்லாவுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றது. சிற்றி சார்பாக பெர்ணார்டோ சில்வா, மத்தெயுஸ் நுனேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, வில்லா சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்க்கஸ் றஷ்ஃபோர்ட் பெற்றிருந்தார். பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 79 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 66 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 61 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் சிற்றியும், 60 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும் காணப்படுகின்றன.




ஸ்பானிய லா லிகாத் தொடர்:


## மல்லோர்காவை வென்ற பார்சிலோனா

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் புதன்கிழமை(23) நடைபெற்ற மல்லோர்காவுடனான போட்டியை 1-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்றது.

பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை டனி ஒல்மோ பெற்றிருந்தார்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 76 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா உள்ளது. 69 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட்டும், 63 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோ மட்றிட்டும், 57 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் அத்லெட்டிக் பில்பாவோவும் காணப்படுகின்றன.

இதில் மற்றைய அணிகளை விட பார்சிலோனா ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.



## ஒலிம்பிக்கில் பங்கேற்பது குறித்து தீர்மானிக்காத பைல்ஸ்

வரலாற்றில் அதிக பதக்கங்களைப் பெற்ற ஜிம்னாஸ்டிக் வீராங்கனையான ஐக்கிய அமெரிக்காவின் சிமோன் பைல்ஸ், எதிர்வரும் 2028ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறும் ஒலிம்பிக்கில் பங்கேற்பதாவென தீர்மானிக்கவில்லையெனக் கூறியுள்ளார்.

தனது உடல் வயதானதை பரிஸில் உணர்ந்ததாகத் தெரிவித்த 28 வயதான பைல்ஸ், போட்டியைத் தொடர்ந்து 10 நாள்கள் தான் உடல் நலமற்று இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.பி.எல்:

## லக்னோவை வீழ்த்திய டெல்லி

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), லக்னோவில் செவ்வாய்க்கிழமை (22) நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: டெல்லி

லக்னோ: 159/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஏய்டன் மார்க்ரம் 52 (33), மிற்செல் மார்ஷ் 45 (36), ஆயுஷ் படோனி 36 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: முகேஷ் குமார் 4/33 [4], மிற்செல் ஸ்டார்க் 1/25 [4], துஷ்மந்த சமீர 1/25 [3], அக்ஸர் பட்டேல் 0/29 [4], குல்தீப் யாதவ் 0/33 [4])

டெல்லி: 161/2 (17.5 ஓவ.) (துடுப்பாட்டம்: லோகேஷ் ராகுல். ஆ.இ 57 (42), அபிஷேக் பொரேல் 51 (36),அக்ஸர் பட்டேல் ஆ.இ 34 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிக்வேஷ் ரதி 0/24 [4], ஆவேஷ் கான் 0/19 [3])

போட்டியின் நாயகன்: முகேஷ் குமார்.

இந்நிலையில் பெங்களூருவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 24, ஏப்ரல் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.